# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 21255/SCIC/2023**

திரு ச. கோதண்டராமன் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 21.09.2023 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், கிருஷ்ணகிரி மாவட்டம் போலுபள்ளி கிராம நிர்வாக அலுவலகர் மற்றும் அவரது அலுவலகம் சம்மந்தமாக 9 இனங்களில் அதன் உட்பிரிவுகளுடன் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. மனுதாரர் 31.10.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல்

முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார் மேல்முறையீட்டு அலுவலரால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 08.12.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 21255/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலரால் 07.11.2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தான் கோரிய தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறும், தன்னை காணொளிக்காட்சி விசாரணைக்கு அழைக்குமாறும் தெரிவித்து 28.11.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளிக்காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற காணொளிக்காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது**.. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ச. வசந்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 21.09.2023 தேதியிட்டு அனுப்பிய தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவிற்கும், சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 31.10.2023 தேதியிட்டு அனுப்பிய முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர்களால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. எனவே மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்காத காரணத்திற்காக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவர்களது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலர்களிடமிருந்து பெற்று ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் கோரிக்கைகளுக்கு இனவாரியான தகவல்களை 07.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அக்கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

6. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க ஆணையத்தால் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டும், அவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்று, **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 21255/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

திரு N. விஜயகுமார்,
தனி வட்டாட்சியர்,
நுகர்பொருள் வாணிபக் கழகம்,
கிருஷ்ணகிரி
(**முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்,**
**வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி**)

திரு பிரகாஷ்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
(**முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி**)

**<u>மனுதாரர்</u>**:-
திரு ச. கோதண்டராமன்,
த/பெ சங்கரப்பநாயுடு,
குருபரப்பள்ளி வழி & அஞ்சல்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 115

**<u>நகல்</u>**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

Copy to: File TK/PS